<u>மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :</u> ஏற்கெனவே அண்ணா சிலைக்கு அருகே அமைந்துள்ள சுரங்கப்பாதைக்கும், சென்டரல் ஸ்டேஷனுக்கு அருகிலே அமைக்கப்பட்டிருக்கும் சுரங்கப் பாதைக்கும் எவ்வளவு செலவாகியிருக்கிறது என்ற புள்ளி விவரம் என்னிடம் இல்லை. இதைப்பற்றித் தனியாக உறுப்பினர் அவர்கள் கேள்வி கேட்டால், பதில் தருகிறேன். சாந்தியின் பக்கத்தில் சுரங்கப்பாதை அமைப்பது பற்றித் திட்டம் தயாரித்துக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் எவ்வளவு செலவாகும் என்ற மதிப்பீடு வரவில்லை. வந்தபிறகு தான் பரிசீலனை செய்யப்படும்.

THIRU A. R. DAMODARAN: Sir, will the Government consider the desirability of installing escalators in very busy areas like the Sub-way near the Central Station as in most metropolitan areas, instead of putting up a rigid structure like cement concrete sub-ways, since escalators are put up in many modern Cities ?

<u>மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :</u> வளர்ந்துவருகின்ற எல்லா நகரங்களிலேயும் எஸ்கலேட்டர் போட்டிருக்கிறார்கள். அதைப்போல் சென்னையிலே போடப்படவேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் யோசனை தெரிவித்திருக்கிறார்கள். அந்த யோசனை பரிசிலனையில் இருந்துகொண்டிருக்கிறது.

THIRU G. VASANTHA PAI : Sir, how much current will each escalator consume ?

The Hon. THIRU P. U. SHANMUGAM : Sorry, Sir, I am not aware of it. The deailed estimates have not yet been prepared.

THIRU G. SWAMINATHAN : Sir, what will happen to the escalators after they are installed when there is current cut ?

THE HON. THIRU P. U. SHANMUGAM : Naturally, it will stop, Sir.

Hoarding of food and other essential commodities.

*106. Q. THIRU M. SANKARALINGAM (on behalf THIRU V. THANGAPANDIAN) : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) the number of persons against whom prosecutions were launched from March to June 1974, for hoarding food and other essential commodities in Ramanathapuram district ;

(*b*) the number of persons from whom essential commodities were seized by the Government ; and

(*c*) the manner in which the Government disposed of the food and other essential commodities so seized ?

TRUTH ALONE TRIUMPHS

உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களைப் பதுக்குதல்

திரு. எம். சங்கரலிங்கம் (திரு. வே. தங்கபாண்டியன் சார்பில்) : மாண்புமிகு உணவு—கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1974 ஆம் ஆண்டு மார்ச் முதல் ஜூன் மாதம் வரை, இராமநாதபுரம் மாவட்டத்தில் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களைப் பதுக்கியதற்காக எத்தனை பேர் மீது வழக்கு தொடரப்பட்டுள்ளது ?

(இ) எத்தனை பேர்களுடைய பொருட்களை அரசு கையகப்படுத்தியுள்ளது ?

(உ) கைப்பற்றிய உணவு மற்றும் அத்தியாவசியப் பண்டங்களை அரசாங்கம் என்ன செய்தது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) எவர் மீதும் நீதிமன்றத்தில் வழக்கு போடப்படவில்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

(உ) வினாவிற்கு இடமில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : எத்தனையோ பேர்களுடைய பொருட்களை அரசு கையகப்படுத்தியுள்ளதாகச் சொன்னார்கள். அது மாதிரி கையகப்படுத்தி வழக்குப்போடாமல் இருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சில வழக்குகளை நாம் நீதிமன்றத்திற்குக் கொண்டுபோகிறோம். சில வழக்குகளை ப்ரொக்யூர்மெண்ட் பேசிஸ்சிலே வாங்கிவிடுகிறோம். இந்தக் கேள்வியின் அடிப்படையில் வரும் எவர்மீதும் வழக்குப் போடவில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : எத்தனை பேர் பதுக்கினார்கள் என்று அரசுக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எத்தனை பேர் பதுக்கினார்கள் என்று என்னிடத்திலே தகவல் இல்லை. சிலபேரிடத்திலே இருக்கிற நெல்லை புரக்கியூர்மெண்ட் ரேட்டில் புரக்கியூர் செய்துவிடுகிறோம். எவ்வளவு பதுக்கி வைத்திருந்தார்கள் என்பதுபற்றிய தகவல் என்னிடம் இல்லை.

THIRU A. R. DAMODARAN : Sir, may I know if the producers who have not given their levy paddy are being prosecuted under the Maintenance of Internal Security Act in Tamil Nadu ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மிஸா சட்டத்தின்படி செய்யப்படவில்லை.